# open house colombo

## தோட்டங்களும் பசுமையான வெளிகளும்

## 23–24 and 30–31 March 2024

கொழும்பு பார்வையாளர் வெளித்திறப்பு என்பது உலகளாவிய பார்வையாளர் வெளித்திறப்பு வலையமைப்பின் ஒரு பகுதியாகும். இது திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகள் மூலம் கட்டடக்கலையையும் வடிவமைப்பை மேலும் பலருக்கு அணுகக்கூடியதாக ஆக்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய பார்வையாளர் வெளித்திறப்பானது ஊடாடும் வழிமுறைகள் மூலம் தனித்துவமான நகர்ப்புற கட்டிடக்கலைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அதாவது அணுகுவதற்கு மிகவும் சவாலானதாக இருக்கும் வெளிகளைப் பற்றிய தகவல்களையும் அவற்றுக்கான நுழைவையும் இது வழங்குகிறது. ஜெஃப்ரி பாவா அறக்கட்டளை 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அதன் முதல் கொழும்பு நிகழ்விலிருந்து பார்வையாளர் வெளித்திறப்பின் உள்ளூர் அமைப்பாளராக இருந்து வருகிறது. கொழும்பு பார்வையாளர் வெளித்திறப்பில் ஜெஃப்ரி பாவா, மின்னெட் டி சில்வா, ஜஸ்டின் சமரசேகர, பாணினி தென்னக்கோன், மற்றும் வலண்டைன் குணசேகர உள்ளடங்கிய கட்டடக் கலைஞர்களின் கட்டடங்கள் இடம்பெற்றுள்ளன.

“லுணுகங்கைக்கு” என்ற கருப்பொருட்களுக்கு ஏற்ப, தோட்டத்தின் 75 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் அறக்கட்டளையின் பல பருவகால கொண்டாட்டமான கொழும்பு பார்வையாளர் வெளித்திறப்பு 2024 இன் கருப்பொருள் “தோட்டங்களும் பசுமையான வெளிகளும்” ஆகும். 2023 பார்வையாளர் வெளித்திறப்பு நிகழ்ச்சித்திட்டம் பெந்தோட்டையில் அதே கருப்பொருளைக் கொண்டிருந்ததுடன் லுணுகங்கை, எனா டி சில்வா வீடு, பூட்டிக் 87, ஹெரிட்டன்ஸ் ஆயுர்வேதம் மற்றும் பெவிஸ் பாவாவின் ப்ரீஃப் தோட்டம் உள்ளிட்ட இடங்களை அவ் வெளித்திறப்பு திறந்தது. இந்த கருப்பொருளை கொழும்புக்கு கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அங்கு எங்கு பார்க்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரிந்தால் மறைக்கப்பட்ட பசுமையான இடங்கள் ஏராளமாக உள்ளன!

மேலும் தகவலுக்கு, பின்வரும் இணைப்புகளைப் பார்வையிடவும்:
பதிவு: bit.ly/ohc2024
ஜெஃப்ரி பாவா அறக்கட்டளை நிகழ்வுகள்: geoffreybawa.com/events
கொழும்பு பார்வையாளர் வெளித்திறப்பின் இணையப் பக்கம்:
openhouseworldwide.org/colombo

ஐளெவயபசயஅ இல் @openhousecolombo மற்றும் @geoffreybawatrust இல் எங்களைப் பின்தொடர மறக்காதீர்கள்!

## ஆயத்தம்

பார்வையாளர் வெளித்திறப்பு நாட்கள் மிகவும் வேடிக்கையாக இருக்கும். ஆனால் நீண்டதாக இருப்பதோடு வெளியில் நிறைய நேரம் செலவழிக்க வேண்டியேற்படும்—குறிப்பாக இந்த சிறப்பு “பசுமை இடங்கள்” நிகழ்விற்கு! பின்வரும் விடயங்களை நாங்கள் உங்களுக்கு பரிந்துரைக்கிறோம்:

- உடல் நீர்ச் சமநிலையை பேணுங்கள்: உங்கள் சொந்த தண்ணீர் போத்தலைக் கொண்டு வாருங்கள்.
- வெயிலில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்: தொப்பி அல்லது கவிகையை அணிந்து சன்ஸ்கிரீனைப் பயன்படுத்துங்கள்.
- மழைக்கு: குடை ஒன்றைக் கொண்டு வாருங்கள்.
- நுளம்புக் கடியை தவிர்க்க: நுளம்பு விரட்டியை தெளியுங்கள்.
- சந்தர்ப்பத்திற்கான உடை: வசதியான ஆடை மற்றும் உறுதியான பாதணிகளைத் தெரிவு செய்யுங்கள்.

## அட்டவணை

திறந்த அணுகல் மற்றும் சுற்றுப்பயண நேரங்கள் பற்றிய தகவலுக்கு, எங்கள் Eventbrite தளம்: bit.ly/ohc2024 ஐப் பார்வையிடுங்கள்.

### முதல் வார இறுதி: 23rd–24th March

| இடங்கள் | கட்டடக் கலைஞர் | திறந்த தேதி | முகவரி |
|---|---|---|---|
| சார நில்ல | அமில டி மெல் | 23rd March | 30/8, 6 வது ஒழுங்கை, கொழும்பு 05 |
| டி சொய்சா வீடு | ஜெஃப்ரி பாவா | 23rd March | 61/5, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| கோர்டன் கார்டன்ஸ் | சேர் ஆர்தர் கோர்டன் | 24th March | ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 |
| லக்மஹால் சமுதாய நூலகம் | தெரியவில்லை | 24th March | 8A, அல்ஃபிரட், ஹவுஸ் வீதி, கொழும்பு 03 |
| வாழும் மீட்பர் கிறிஸ்துவின் பேராலயம் | டி. என். வைன்-ஜோன்ஸ் மற்றும் வில்சன் பீரிஸ | 24th March | 368 / 3A, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 |

### இரண்டாவது வார இறுதி: 30th–31st March

| இடங்கள் | கட்டடக் கலைஞர் | திறந்த தேதி | முகவரி |
|---|---|---|---|
| இஷ்க் கொழும்பு | சன்ன தஸ்வத்த | 30th March | 17/2, அல்ஃபிரட் பிளேஸ், கொழும்பு 03. |
| எம்.ஜே.எஃப் மேற்கு நிலையம் | தெரியவில்லை | 30th March | இல. 340, காலி பிரதான வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ 10400 |
| பொரளை மயானம் | தெரியவில்லை | 31st March | 475, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 08 |
| வாழும் மீட்பர் கிறிஸ்துவின் பேராலயம் | டி. என். வைன்-ஜோன்ஸ் மற்றும் வில்சன் பீரிஸ | 31st March | 368 / 3A, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 |

# டி சொய்சா வீடு



**முகவரி:**
61/5, தர்மபால மாவத்தை,
கொழும்பு 07.
ஹபீப் வங்கிக்கு எதிரே (70 ஸ்ரீமத் அனகாரிக தர்மபால மாவத்தை, கொழும்பு 03) மற்றும் அல்விஸ் பிளேஸ் திருப்பத்திற்குப் பின்னர்

**பொதுப் போக்குவரத்து:** தர்மபால மாவத்தை பேருந்து நிறுத்தம் (145, 175, 177) இது வீட்டிற்கு வெளியே உள்ளது.

**வாகனத் தரிப்பிட வசதி இல்லை.**

**கட்டடக் கலைஞர்:** ஜெஃப்ரி பாவா
**சேவை பெறுநர்:** க்ளோய் மற்றும் சிசில் டி சொய்சா
**ஆண்டு:** 1985-1991

→ மேலும் தகவலுக்கு

Image source:
Sebastian Posingis

டி சொய்சா வீடு கலைஞர் க்ளோய் டி சொய்சா மற்றும் அவரது கணவர் சிசில் ஆகியோருக்காக வடிவமைக்கப்பட்டது. அவர்களது பிள்ளைகள் வெளியேறிச் சென்ற பிறகு தங்கள் குடும்ப வீடு மிகப் பெரியதாக இருப்பதாக அவர்கள் கருதினர். குடும்ப வீட்டிற்கு அடுத்ததாக நிலை நிறுத்தப்பட்ட இந்த வீட்டை ஜெஃப்ரி பாவா, க்ளோயின் முன்பே இருந்த பழங்கால தளபாடங்களைச் சுற்றி வீட்டின் வடிவமைப்பை உருவாக்கினார். பாவா, டி சொய்சா குடும்பத்தின் நெருங்கிய நண்பராக இருந்தார். இதனால் இந்த வீட்டிற்கு அடிக்கடி வருபவர். பாவா லுணுகங்கையிலிருந்து ஒரு மூட்டை மயில் இறகுகளை க்ளோயின் மகள் ஷ்ர்யாவுக்காக கொண்டு வந்ததை ஷ்ர்யா அன்பாக நினைவு கூர்ந்தார். ஏனெனில் அவர் அவர்களை அவ்வளவு நேசித்தார்.

'43 குழுவிலிருந்து கலையின் ஈர்க்கக்கூடிய காட்சியகச் சுவரைக் காண்பிக்கும் ஒரு படிக்கட்டு வீட்டின் மற்ற பகுதிகளுக்கு வழிவகுக்கிறது. இதில் ஒரு வாசிப்பறை, உணவுண்ணும் பகுதி, படுக்கையறை, குளியலறை, வாழ்க்கை அறை மற்றும் மொட்டைமாடித் தோட்டம் ஆகியவை உள்ளன. இந்த வீடு பாவாவின் தொழில் வாழ்க்கையின் முடிவிற்கு அண்மைய காலத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், இது அப்போதும் கட்டடக்கலை பரிசோதனையைக் கொண்டிருந்தது. இடத்திற்கு ஒளியைக் கொண்டுவரும் பெரிய சாளரங்களில் காணப்படுவது போல, டி சொய்சா வீடானது எஃகு இரும்பை பயன்படுத்துவதில் பாவாவின் முதல் பரிசோதனையாகும். இறுதி விளைவில் திருப்தியடைந்த பாவா பின்னர், இப்போது அவரது தனிச்சிறப்பான கந்தலம ஹோட்டல் திட்டத்தில் எஃகு இரும்பை பயன்படுத்தினார்.

பாவா வீட்டில் உருவாக்கிய தோட்ட இடங்களை நிரப்பிய பசுமைக்கு க்ளோய் பொறுப்பானவர். இது கோவிட் காலத்தில் குறிப்பாக உயிர்ப்புடன் இருந்தது என்று ஷ்ர்யா குறிப்பிட்டார். ஏனெனில் அவர் "ஒருபோதும் மூடப்பட்டதாகவோ அல்லது நெருக்கப்பட்டதாகவோ உணரக் கூடாது என்பதை அவை உறுதி செய்தன."

# சார நில்ல



**முகவரி:**
30/8, 6 வது ஒழுங்கை
கொழும்பு 05. கிருலப்பனை
டி. எம். கொலம்பகே மாவத்தையிலிருந்து

**பொதுப் போக்குவரத்து:** கிருலப்பனை ரயில் நிலையமும் (பல ரயில்கள்) திறந்த பல்கலைக்கழக பேருந்து நிறுத்தமும் (176) அருகிலேயே உள்ளன. கொலம்பகே மாவத்தையிலிருந்து 6வது ஒழுங்கைக்கு திரும்பினால் அது நேரடியாக சார நில்லவுக்கு செல்லும்.

**வாகனத் தரிப்பிட வசதி இல்லை.**

**கட்டடக் கலைஞர்:** அமில டி மெல்
**தோட்ட வடிவமைப்பு:** கசன வயிரபும
**சேவை பெறுநர்:** துசித மற்றும் ஹிரான் ஜயசுந்தர
**ஆண்டு:** 2022

→ மேலும் தகவலுக்கு

Image source:
Anusha Attygalle

சார நில்ல என்பது இலங்கையில் பிறந்த, ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட நடிகை துசிதா ஜெயசுந்தராவால் தொடங்கப்பட்ட ஒரு பல்நோக்குடையதும் மீளுருவாக்கம் கொண்டதுமான சமுதாய இடமாகும். 50 வயதில் காலமான சட்டத்தரணியும், மொழியியலாளரும், மனித உரிமை ஆர்வலருமான ஜெயசுந்தரவின் சகோதரர் ஹிரானுக்கு இது ஒரு வாழும் அஞ்சலியாகும். தனியாருக்குச் சொந்தமான இந்த நிலம் முதலில் ஒரு நிலைத்த பயிர்த் தோட்டமாக கருதப்பட்டது. ஆனால் 2022 இன் எரிபொருள் பற்றாக்குறையானது கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான சமுதாய சமையலறையை உருவாக்க வழிவகுத்தது. பின்னர் இது ஒரு நூலகம்ஃவாசிப்பு அறை மற்றும் ஆங்கில மொழி திறன் பெறுகை மையம் (ELAC) ஆகியவற்றை உள்ளடக்கியதாக விரிவடைந்தது.

சார நில்ல நாட்டின் முதல் தனியாருக்கு சொந்தமான ELAC ஆக இருப்பதுடன் தற்போது சுமார் 25 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஆழ்ந்த ஆங்கில அமர்வுகள் மற்றும் பிற வளங்களுக்கான கட்டணங்களை வசூலிப்பதை தவிர்த்து, சார நில்ல பெற்றோர்களையும் குழந்தைகளையும்  இந்த தளத்தில் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் வழிகளைக் கொண்டு வருவதன் மூலம் “நன்றி செலுத்த” அழைக்கிறது.

தோட்டத்தில் காய்கறிகள் (வள்ளல் கீரை, தக்காளி, மிளகாய், வெண்டிக்காய், வெங்காயம்), மூலிகைகள் (எலுமிச்சைப் புல், கறிவேப்பிலை, வல்லாரை) மற்றும் பழங்கள் (மா, வாழை, பப்பாளி) ஆகியவை உள்ளன. “மேவு-தோட்டம்” என்ற எண்ணக்கருவின் அடிப்படையில், தோட்டம் ஒரு சுய-நீடித்த சுற்றுச்சூழல் அமைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் வெளியின் தத்துவத்திற்கு ஏற்ப இது புதுமையான முறைகளைப் பயன்படுத்துகிறது-அதாவது துவிச்சக்கரவண்டி சக்கரத்தை ஒரு நெம்புகோலாகப் பயன்படுத்தும் முழு செயற்பாட்டு நீர் கிணறு போன்றவை.  சார நில்ல நன்கொடைகளை ஏற்பதோடு தன்னார்வலர்களை தனது பணியை மேற்கொள்ள வரவேற்கிறது.

# கோர்டன் கார்டன்ஸ்



**முகவரி:** ஜனாதிபதி மாளிகை
ஜனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

**பொதுப் போக்குவரத்து:** அருகிலுள்ள பேருந்து நிறுத்தம் ஃபோர்ட் யோர்க் (168) ஆகும்.

**வாகனத் தரிப்பிட வசதி இல்லை.**

**தோட்ட வடிவமைப்பாளர்:** சேர் ஆர்தர் கோர்டன்
**சேவை பெறுநர்:** விக்டோரியா மகாராணி
ஆண்டு: 1887

→ மேலும் தகவலுக்கு

Image source:
© Rita McIntosh, 1930,
Flickr Creative Commons license

கோர்டன் தோட்டங்கள் அதன் பெயரை பிரித்தானிய ஆளுநர் சேர் ஆர்தர் கோர்டனிடமிருந்து பெற்றது. அவர் விக்டோரியா மகாராணியின் 1887 பொன் விழாவை ஒட்டி மூன்று ஏக்கர் நிலத்தை ஒரு தோட்டமாக மாற்றினார். மரங்கள், பூக்கள் மற்றும் நீரூற்றுகள் தோட்டத்தின் நிலப்பரப்பை உருவாக்குகின்றனளூ முதலில் இருந்த முடிசூட்டிய விக்டோரியா மகாராணியின் பளிங்கு சிலை பின்னர் நகர்த்தப்பட்டது.

தோட்டத்தின் தளம் போர்த்துக்கீசிய, ஒல்லாந்து மற்றும் பிரித்தானிய ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட அதன் சொந்த வரலாற்றைக் கொண்டுள்ளது. மூன்று ஏக்கர் தோட்டம் தங்கியிருக்கும் 95 ஏக்கர் நிலம் அதற்கேற்ப இரண்டு தேவாலயங்கள், ஒரு மயானம் மற்றும் கிரிக்கெட் மற்றும் கால்பந்து போட்டிகளுக்கான விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பல மறு செயற்பாடுகளுக்கு சேவை செய்தது.

உண்மையில் அந்த நேரத்தில் கொழும்பில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட ஒரு பொது தோட்டமாக கோர்டன் கார்டன்ஸ் உருவானது. ஜனாதிபதி மாளிகையின் அதிகார வரம்பின் கீழ் வைக்கப்பட்டதிலிருந்து 1980 வரை இந்த தோட்டம் ஒரு பொது பூங்காவாக செயற்பட்டது. கோர்டன் கார்டன்ஸ் இப்போது பொது மக்களை அனுமதிப்பதில்லை.

# லக்மஹால் சமுதாய நூலகம்



**முகவரி:**
8A, அல்ஃபிரட் ஹவுஸ் வீதி,
கொழும்பு 03

**பொதுப் போக்குவரத்து:** பம்பலப்பிட்டிய சந்தி பேருந்து நிறுத்தம் (பல பேருந்துகள்) பத்து நிமிட தூரத்தில் உள்ளது.

**வாகனத் தரிப்பிட வசதி இல்லை**

**கட்டடக் கலைஞர்:** தெரியவில்லை
**சேவை பெறுநர்:** சிறில் லியோனார்ட் விக்கிரமசிங்க
**ஆண்டு:** கட்டப்பட்டது 1937; புதுப்பிக்கப்பட்டது 2019-2021

→ மேலும் தகவலுக்கு

Image source:
Rajiva Wijesinha

லக்மஹால் ஒரு நூலகமாகவும் சமுதாய இடமாகவும் உருவாவதற்கு முன்பு விக்கிரமசிங்க குடும்பத்தின் குடும்ப இல்லமாக இருந்தது. இந்த வீட்டை சிறில் லியோனார்ட் விக்கிரமசிங்க மற்றும் அவரது மனைவி எஸ்மே (நீ மூனேமல்லே குணவர்த்தன) ஆகியோர் கட்டுவித்தனர். அவர்களில் இரண்டாம் நபர் 1994 இல் அவர் இறக்கும் வரை லக்மஹாலில் வசித்து வந்தார்.

பெரிய காலனித்துவ வீடுகளுக்கு பெயரிடும் நடைமுறையிலிருந்து வீட்டின் தலைப்பு வெளிப்பட்டது. இருப்பினும் அக் குடும்பம் "மேலும் இலங்கையை சேர்ந்தது" என்ற இயல்பை வெளிக்காட்டும் ஒன்றை விரும்பியது, "லக்மஹால்" ஐ உருவாக்க "லங்கா" மற்றும் "தாஜ்மஹால்" ஆகியவற்றிலிருந்து கூறுகளை பெற்றனர். நூலகத்தில் உள்ள குடும்ப புகைப்படங்களின் ஒரு சுவர் பொது இடத்திற்கும் தனியார் வீட்டிற்கும் இடையிலான பிரிவை வரையறுக்கிறது. இது அதன் மூன்றாம் தலைமுறை உரிமையாளர்களிடையே பிரிக்கப்படுவதற்கு முன்பு மிகப் பெரிய ஆரம்ப சொத்தின் ஒரு பகுதியாக இன்னும் உள்ளது. பிரிவை உருவாக்கும் போது, கட்டடக்கலை சமரசம் செய்யப்படுவதைத் தவிர்ப்பது குறிப்பிடத்தக்க முன்னுரிமையாக இருந்தது.

லக்மஹால் சமுதாய நூலகத்தின் நிறுவனர் அனிஷா டயஸ் பண்டாரநாயக்க, கொழும்பில் வாசிப்பு, கல்வி மற்றும் சமுதாயத்தை ஊக்குவிக்கும் ஒரு ஒன்றுகூடும் இடத்தை உருவாக்க முயன்றார். இரவலுக்கு கிடைக்கக்கூடிய புத்தகங்களின் அலுமாரிகளுக்கும் படிப்பு பகுதிகளுக்கும் மேலதிகமாக, லக்மஹால் ஆனது நிகழ்வுகளுக்கான ஒரு வலுவான திட்ட நாட்காட்டியை பராமரிக்கிறது. இந்த நூலகம் புத்தக நன்கொடைகளை ஏற்றுக்கொள்கிறது.

லக்மஹால் சமுதாய நூலகம் குடும்ப ஒத்துழைப்பின் விளைவாகும்-அனிஷாவின் தந்தை கட்டமைப்பு தேவைகளை பொறுப்பேற்றுக் கொண்டார், அவரும் அவரது தாயும் உட்புறங்களை வடிவமைத்தனர், அவரது சகோதரர் விளக்குகளை உருவாக்கியதோடு இடத்திற்கான மர நடுகையை மேற்கொண்டார்-இவை அனைத்தும் சிறு வயதில் அவரது தாயார் ஏறி விளையாடிய ஒரு பெரிய ஈழத்தலரி மரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. அவ்விடத்தில் அனிஷா தனது தந்தையுடன் ஒரு குழந்தையாக ஆறு இதழ்கள் கொண்ட பூக்களைத் தேடுவதை நினைவில் கொள்கிறார். வெளிப்புறத்தை வண்ணமயமாக்கும் சின்னமான இளஞ்சிவப்பு வண்ணப்பூச்சு நிழல், "செப்டம்பர் விடியல்", வீட்டின் தொடக்கத்திலிருந்து மாறவில்லை.

# வாழும் மீட்பர் கிறிஸ்துவின் பேராலயம்



**முகவரி:**
368 / 3A பௌத்தாலோக மாவத்தை
கொழும்பு 07.

**பொதுப் போக்குவரத்து:** விஜேராம ஃ டீஆஜஊஉ பேருந்து நிறுத்தம் (154) மைதானத்திற்கு வெளியே உள்ளது.

**கட்டடக் கலைஞர்:** டி. என். வைன்-ஜோன்ஸ் மற்றும் வில்சன் பீரிஸ்
**சேவை பெறுநர்:** கொழும்பு ஆயர் வணக்கத்துக்குரிய ஹரோல்ட் டி சொய்சா
**ஆண்டு:** 1945-1968

→ மேலும் தகவலுக்கு 1 / 2

Image source:
Rippleworth

வாழும் மீட்பர் கிறிஸ்துவின் பேராலயம்-இப்போது கொழும்பின் பிரதான பகுதியாகக் கருதப்படுவது-முன்னர் தொற்று நோய் மருத்துவமனையின் மைதானமாக இருந்த இடத்தில் அமைந்துள்ளது. அந்தக் காலத்திலிருந்து ஒரு அசல் வீடாக இருக்கும் இது, இப்போது மேற்றிராணியரது வசிப்பிடமாக உள்ளது. அதற்கு முன், முதலாவது ஆயரின் வசிப்பிடமாக இருந்தது.

பேராலயத்தின் பின்னால் ஒரு வரிசை குடில்கள் ஓய்வுபெற்ற மதகுருமார்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில் ஒரு ஆல மரத்தால் நங்கூரமிடப்பட்ட ஒரு வட்டரங்கம் பரந்த மைதானத்தின் பின்புறத்தில் மறைகிறது. மைதானத்தில் உள்ள தோட்டம் நாடு முழுவதிலுமிருந்து வந்த அரிய தாவரங்களின் தொகுப்பை வழங்குகிறது மற்றும் ஒரு தியான சிக்கல்வழித் தளம் காணியை சுற்றி வருகிறது.

பேராலயம் அதன் மீதான இலங்கையின் தாக்கங்களினால் தனித்துவமானது. இதில் வட்டார கண்டிய கட்டடக்கலை மற்றும் கண்டிய மற்றும் வடக்கு நிலப்பரப்புகளின் சுவரோவியங்கள் அடங்கும். இந்த அழகியல் சமூக உள்ளீட்டுக்கும் காலனித்துவத்திலிருந்து சுயாதீனமாக உணர்ந்த ஒரு இடத்திற்குள் நுழைவதற்கான விருப்பத்திற்குமான விளைவாகும். தேவாலய மணி காலியில் உள்ள ஒரு கப்பலில் இருந்து வந்தது.

இப் பேராலயம் இன்றுவரை முடிக்கப்படாமல் உள்ளதுளு தேவாலயத்தை கட்டி முடித்த நேரத்தில் நாட்டில் மூடிய பொருளாதாரம் இருந்ததால் இந்த திட்டத்திற்கு எவ்வாறு நிதி கிடைத்தது என்ற சந்தேகத்தைத் தூண்டியது. ஜோர்ஜ் கீத் மற்றும் பார்பரா சன்சோனி உள்ளடங்கிய உள்ளூர் கலைஞர்களின் வடிவமைப்புகளைக் கொண்டிருக்கும் நோக்கம் கொண்ட இந்த பேராலயம் அதன் காலத்தின் மிகவும் தனித்துவமான தெற்காசிய தேவாலயங்களில் ஒன்றாக இருந்திருக்கும்.

# இஷ்க் கொழும்பு



**முகவரி:**
17/2, அல்ஃபிரட் பிளேஸ்,
கொழும்பு 03.

**பொதுப் போக்குவரத்து:** அல்ஃபிரட் பிளேஸ் பேருந்து நிறுத்தம் (பல பேருந்துகள்) டுபிளிகேசன் வீதியின் மூலையில் உள்ளது.

**வாகனத் தரிப்பிட வசதி இல்லை.**

**கட்டடக் கலைஞர்:** சன்ன தஸ்வத்த
**சேவை பெறுநர்:** ஹனீஃப் யூசூஃப்
**ஆண்டு:** கட்டப்பட்டது - 2003-2004; புதுப்பிக்கப்பட்டது - 2015-2018

→ மேலும் தகவலுக்கு

Image source:
Ishq Colombo

இஷ்க் கொழும்பு என்பது கொழும்பின் சன நடமாட்டம் அதிகமுள்ள டுபிளிகேசன் வீதியிலிருந்து பசுமை மூடிய வாயிலுக்கு அப்பால் அமைந்துள்ளதும் ஒரு குடும்ப வீடாக இருந்து வளவு சூழ்ந்த மாளிகையாக மாறிய ஒன்றாகும். ஒரு மைய முற்றம் வீட்டை நங்கூரமிட்டு, அதை வழிநடத்தும் அனுபவத்தை வடிவமைக்கிறது. இது மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில் உள்ள கட்டடக்கலைக்கு ஒத்ததான வடிவமைப்பைக் கொண்டுள்ளது. குறிப்பாக இஷ்க்கின் வடிவமைப்பு சிரியாவின் டமஸ்கஸில் உள்ள ஒரு டவுன்ஹவுஸை மாதிரியாகக் கொண்டுள்ளது. அது கட்டடக் கலைஞர் சன்ன தஸ்வத்த தனது சக கட்டடக் கலைஞரான சி. அஞ்சலேந்திரனுடன் ஜெஃப்ரி பாவாவின் அகா கான் விருதினை பெறச் சென்றபோது கண்டுகொள்ளப்பட்டது.

முதலில் யூசூஃப் குடும்பத்தினரால் கட்டப்பட்டு அவர்கள் வசித்த இந்தச் சொத்து சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு விருந்தோம்பல் நோக்கங்களுக்காக புதுப்பிக்கப்பட்டது. மூன்று படுக்கையறைகள்-அவற்றில் இரண்டு பெரிய அறைத்தொகுதிகள்-ஒரு தரை தள வாழிடப் பகுதி, உணவுண்ணும் அறை, நூலகம் மற்றும் மாடி வாழிட அறை ஆகியவை வீட்டில் உள்ளடங்கியுள்ளன. குடும்பத்தின் தனிப்பட்ட தொடுதல்கள் எல்லா இடங்களிலும் உள்ளன. யூசூஃப் ஒரு ஏலத்தில் வாங்கிய கொழும்பைச் சேர்ந்த பழைய புகைப்படங்களின் தொகுப்பு இரண்டாவது மாடியில் ஒரு சுவரை அலங்கரிக்கிறது. அதே நேரத்தில் "கட்டடங்கள் உண்மையில் இருப்பது காட்சிக்கல்ல, ஆனால் அவற்றில் வாழ்வதற்கே" என்ற தஸ்வத்தேவின் நம்பிக்கையுடன் ஒத்துப்போகும் வகையில் திருமதி யூசூஃப் தோட்டக்கலையின் பெரும்பகுதியை மேற்பார்வையிட்டார். வீட்டின் வரலாற்றைக் கருத்தில் கொண்டு, குடும்பத்தின் ஒத்துழைப்புகள் மற்றும் பங்களிப்புகள் சொத்தை அதன் பெயரைப் போலவே வரையறுக்கின்றன: இஷ்க் என்பது அன்பிற்கான அரபிச் சொல்.

## எம்.ஜே.எஃப் மேற்கு நிலையம்




**முகவரி:**
இல. 340 காலி பிரதான வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ 10400

**பொதுப் போக்குவரத்து:** கட்டுபெத்த பேருந்து நிறுத்தம் (பல பேருந்துகள்) நிலையத்திற்கு திரும்புவதற்கு திருப்பதற்கு முன்னால் உள்ளது .

**வாகனத் தரிப்பிட வசதி உள்ளது.**

**கட்டடக் கலைஞர்:** தெரியவில்லை
**சேவை பெறுநர்:** தெரியவில்லை
**ஆண்டு:** அண்ணளவாக 2010

→ மேலும் தகவலுக்கு

Image source:
MJF Centre

எம்.ஜே.எஃப் மேற்கு நிலையம் இலங்கை முழுவதும் உள்ள பதின்மூன்று மெரில் ஜே. பெர்னாண்டோ சேவைநோக்கு மன்றத்தின் நிலையங்களின் மத்திய நிலையமாக இருக்கிறது. ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஒரு காலத்தில் கைவிடப்பட்ட இடமாக இருந்த ஒரு முன்னாள் ஆடை தொழிற்சாலையின் தளத்தில் நிறுவப்பட்ட இது இப்போது வளர்ந்து வரும் சமுதாயம் சார்ந்த இடமாகும்.

எம்.ஜே.எஃப் மேற்கு நிலையம் முதன்மையாக முன் மழலையர் பள்ளி முதல் சமுதாயத்தில் உள்ள வளர்ந்தோர் வரையான பின்தங்கிய பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு பன்முகத்தன்மையான வார நாள் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகிறது. அவற்றில் பெற்றோராக பிள்ளைகள் பராமரிப்பு, பண மேலாண்மை செயலமர்வுகள், தையல், தச்சு வேலை, பை தயாரித்தல், கணித அறிவுறுத்தல், உடல் சிகிச்சை, விருந்தோம்பல் கல்வி மற்றும் பல உள்ளடங்குகின்றன. அனைத்து முயற்சிகளும் பெண்களில் நிதி சுதந்திரத்தை வளர்ப்பது முதல் ஆற்றலற்றோருக்கு நீண்டகாலத் தொழில்களை வளர்ப்பது வரை தன்னாண்மையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன.

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வகுப்பறைகளுக்கு (ஒரு உணர்ச்சி அறை உட்பட) மேலதிகமாக, ஒன்பது ஏக்கர் காணியில் ஒரு ஏக்கர் சேதனப் பண்ணை, ஒரு பட்டாம்பூச்சி தோட்டம், ஒரு முறைப்படி அமைக்கப்பட்ட தோட்டம், ஒரு தகவல் தொழில்நுட்ப ஆய்வகம், ஒரு விடுதி, ஒரு சமுதாய நூலகம், ஒரு உணவகம், ஒரு உணர்ச்சித் தோட்டம், ஒரு சமையற் பாடசாலை, ஒரு கணித மையம், ஒரு மருத்துவத் தோட்டம், ஒரு தச்சுப் பட்டறை மற்றும் ஒரு இயன் சிகிச்சைப் பிரிவு. ஆகியவற்றோடு - இலங்கையின் நகர்ப்புறங்களில் முதலாவதாக அமைக்கப்பட்ட, 300 மர மற்றும் தாவர இனங்களைக் கொண்ட ஒரு முறைப்படி அமைக்கப்பட்ட தோட்டமும் பட்டாம்பூச்சி தோட்டத்தில் உள்ள பல்வேறு வகையான தாவரங்களும் 60 க்கும் மேற்பட்ட விலங்கினங்களை ஈர்த்துள்ளன. சிறிய விற்பனையாளர்கள் தங்கள் கைவினைப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை விற்க இரவுச் சந்தை, பட்டாம்பூச்சிகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் மற்றும் புத்தக வாசிப்புகள் போன்ற நிகழ்வுகளையும் இந்த இடம் கொண்டுள்ளது.

# பொரளை மயானம்



**முகவரி:**
475, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 08.

**பொது போக்குவரத்து:** ஹவுஸ் ஆஃப் ஃபேஷன் பேருந்து நிறுத்தம் (பல பேருந்துகள்) ஐந்து நிமிட நடைத் தூரத்தில் உள்ளது.

**கட்டடக் கலைஞர்:** தெரியவில்லை
**ஆண்டு:** 1866

→ மேலும் தகவலுக்கு

Image source:
© John Falconer, 2008,
Flickr Creative Commons license

கொழும்பின் முக்கிய அடக்க மைதானமாக, பரந்த பொரள்ளை மயானத்தில் இந்துக்கள், பௌத்தர்கள், சிந்தோக்கள், ரோமன் கத்தோலிக்கர்கள், அங்கிலிகன்கள் மற்றும் மத நிறுவனச் சார்பற்ற கிறிஸ்தவர்கள் உள்ளடங்கலான பல மதங்களுக்கான தனித்தனி பிரிவுகளுக்கு மேலதிகமாக நான்கு தகனக் கூடங்கள் உள்ளன. அதன் பல்வகைமையின் விளைவாக, மாயானமானது பசுமை மற்றும் விரிவான அடக்க இடங்களின் கலவையின் மூலம் அதன் தனித்துவமான நிலப்பரப்பை உருவாக்குகிறது. இந்த மயானம் கொழும்பு உள்ளுர் வாசிகளுக்கும் பிரமுகர்களுக்கும் இறுதி ஓய்வு இடமாகும். பொரள்ளையில் அதன் 120,000 க்கு மேற்பட்ட கல்லறைகளின் ஒரு பகுதியாக 300 க்கும் மேற்பட்ட போர் அடக்கங்கள் உள்ளன.

இந்த மயானம் பொரள்ளை என்று அழைக்கப்படும் கொழும்பின் சுற்றுப்புறத்தில் இருப்பதனால் பொரள்ளை மயானம் என்று அழைக்கப்படுகிறது. கொழும்பு மாநகர சபை தற்போது இந்த மயானத்தை அதன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதோடு அதனை பராமரிக்கிறது. இது கொழும்பின் உள்ளார்ந்த இருப்புக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட இழிநிலையில் அதன் பங்கு காரணமாகவும் உள்ளுர் மற்றும் பார்வையாளர்களுக்கு பிரபலமான இடமாக உள்ளது.